BRAMPTON

Media Release

உடனடி வெளியீட்டுக்காக

# இந்த வருட குளிர்காலத்தில் சாலைகளில் பனிப்பொழிவினை நீக்க ப்ராம்ப்ட்டன் நகரம் தயாராக இருக்கிறது

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 22, 2020) – குளிர்கால பனிப்பொழிவு வந்துவிட்டது; மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரப் பணிப்படையும் தயாராக இருக்கின்றனர்! சாலைகளில், நகரத்திற்கு சொந்தமான பக்கவாட்டு நடைபாதைகள், பள்ளி குறுக்கு சாலை சந்திப்புக்கள் மற்றும் பொழுதுபோக்கிற்கான நடைபாதைகளில் பனியினால் ஏற்படும் தடைகளை அகற்ற நாங்கள் தயாராகவே இருக்கிறோம் என்பதை உறுதிப்படுத்த எங்கள் பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியாற்றுகின்றனர்; இதனால், குடியிருப்புவாசிகள் தாங்கள் செல்லுமிடங்களுக்கு பாதுகாப்புடன் செல்ல முடியும்.

குளிர்காலத்திற்கு ஏற்றபடி தயாராக இருத்தல் என்பதற்கு, ஒவ்வொருவரின் உதவியுடன் ஒரு அணியாக இருந்தபடி செயல்படுவது என்று அர்த்தமாகும்;இதை குடியிருப்புவாசிகளுக்கு நகர நிர்வாகம் குடியிருப்புவாசிகளுக்கு உணர்த்துகிறது; இதனால் இந்தக் குளிர்காலத்தில் அனைவரும் பாதுகாப்புடன் இருக்க முடியும்:

• பனிப்பொழிவுக்குப் பின்னர் பக்க வாட்டு நடைபாதைகளில் கிடக்கும் பனிக்கட்டி, பனித்துகள் மற்றும் சகதியை அகற்றுதல்;

•தெருக்களில் வாகனங்களை நிறுத்தி வைக்க அனுமதியில்லை மற்றும் குளிர்கால சிறப்புநிகழ்ச்சிகளின்போதும் இது அமல் செய்யப்படும். பனி அகற்றுவதற்கான பணிகளின்போது வாகனங்களை நகர்த்திக் கொடுத்து விடவும், இதனால் அவசர ஊர்திகள் தடையில்லாமல் செல்ல முடியும்;

• பனிப்பொழிவு முடிந்துபோய் 24 மணி நேரம் ஆகியிருந்து, அப்போதும்கூட உங்கள் தெருக்களில் தனிக்கவனம் செலுத்த வேண்டியிருந்தால் 311 ஐ அழைக்கவும் அல்லது, 311@brampton.ca,என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.311brampton.ca; என்ற வலைத்தளம் வருவதன் மூலம் அல்லது 311 மொபைல் செயலியை உபயோகிப்பதன் மூலம் தொடர்பு கொள்ளவும்;

• தகுதிவாய்ந்த மூத்தகுடிமக்களுக்கு மற்றும் உடல்ரீதியான இயலாமை கொண்டிருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு பனியை அகற்றுவதற்கான நிதியுதவி கிடைக்கப்பெறுகிறது; இது பற்றி இங்கு அறியவும் : ow.ly/D2R050xgPq2.

கடந்த வருடம், உள்ளூர் சாலைகளில் திரளும் பனித்துகள் அகற்றும் பணியானது 7.5 செ.மீ ஆகும் வரை காத்திருக்காமல் 5 செ.மீ அளவாக இருக்கும்போதே சேவை அளிக்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஒப்புதல் வழங்கியது. அதாவது பனிப்பொழிவு நிகழ்ந்தவுடனேயே வேலையாட்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டனர் என அர்த்தமாகிறது. கூடுதலாக, எந்தெந்த சாலைகள் மற்றும் பக்கவாட்டு நடைபாதைகளில் பனி அகற்றப்பட்டது என்பதை அறிய, குடியிருப்பு வாசிகள் www.brampton.ca/snow, எனும் வலைத்தளத்தில், நகரத்தில் பனி அகற்றுவது பற்றிய தடம் அறிதல் (Plow Tracker) பகுதியில் காணலாம்; இந்த வருடத்தில் 311 மொபைல்செயையிலும் காணலாம்.

குளிர்கால இயக்க செயல்பாடுகள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/snow.

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca *இல்* இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca